**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 304/2023**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **ராமதாஸ்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on(06.06.2026)

Accused absent, petition filed and allowed

<u>கூடுதல் குறுக்கு விசாரணை</u>

ம.சா.ஆ.9–ல் குத்தகை ஒப்பந்தத்தில் பக்கம் எண்.3 ல் இந்த ஒப்பந்தத்தில் முன்பணம் கொடுக்கவோ, வாங்கவோ இல்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தமாகும். ம.சா.ஆ.9–ன் படி நான் வழக்கின் எதிரிக்கு பணம் கடனுக்கு கொடுத்ததாகவும், அவர் திருப்பி கடனை செலுத்துவதற்கு உத்தரவாதம் கொடுத்ததாகவும் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.7 ல் 29.02.2020 அன்று RTGS மூலமாக எனது காசோலை எண். 495987 மூலமாக யாருக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றால் இன்ஷால் பேகத்திற்கு கொடுக்கப்பட்டது. ம.சா.ஆ.7 ஆணவத்தில் இன்ஷால் பேகத்திற்கு 29.02.2020 தேதியில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. (**ஆனால் ம.சா.ஆ.7 ஆவணத்தை நீதிமன்றம் பார்க்கையில் 29.02.2020 தேதியில் இன்ஷால் பேகத்திற்கு கொடுக்கப்பட்டதாக அந்த ஆவணத்தில் இல்லை**.)

இன்ஷால் பேகத்தின் உறவினர் ரம்ஜாள் பேகம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 26.03.2020 அன்று மகேந்திரன் என்பவர் வங்கி கணக்கிலிருந்து எனது கணக்கிற்கு ரூபாய் ஐந்து லட்சம் வரப்பெற்றதா என்றால் வந்தது நான் கொடுத்த பணத்திற்கு அவர் திரும்ப கொடுத்தார். 01.03.2020 தேதியில் தங்களது வங்கி

கணக்கில் எவ்வளவு இருப்பு தொகை இருந்தது என்று பதிவுகள் ம.சா.ஆ.7 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். 02.03.20204 தேதியில் எனது வங்கி கணக்கில் ரூ.45,313.24 உள்ளது என்றால் சரிதான். .ம.சா.ஆ.7 ஆவணத்தில் 28.12.2020 வரை கையிருப்பு ரூ.37,366.18/- என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்பட்ட காலகட்டத்தில் எனது மனைவி சங்கரன்கோவில் காவலர் குடியிருப்பில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான் நானும் சேர்ந்து தான் குடியிருந்தேன். எத்தனை வருடமாக சங்கரன்கோவில் காவலர் குடியிருப்பில் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சுமார் நான்கு வருடம் இருந்தேன். எந்த வருடம் முதல் எந்த வருடம் என்றால் 2020 முதல் 2023 வரை அங்கு தான் இருந்தேன். 02.3.2019 தேதியில் அந்த காவலர் குடியிருப்பில் நான் குடும்பமாக குடியிருந்து வந்ததாக சொன்னால் சரியா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் அந்த காவலர் குடியிருப்பில் குடியிருந்த சமயத்தில் பக்கத்தில் உள்ள ATM-ல் பணம் எடுப்பது வழக்கம் என்றால் சரிதான் போறவார எல்லா ATM-லும் எடுப்பேன். நான் முதல் விசாரணை காட்சியத்தில் வழக்கின் எதிரி அவருக்கு சொந்தமான ஒரு சொத்தை கிரைய ஒப்பந்தம் கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் தங்களுக்கு இந்த வழக்கு எதிரி அவர் சொத்து சம்பந்தமாக எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் அல்ல என்றால் சரிதான். நான் முதலில் அளித்த முதல் நிலை சாட்சியத்தில் நிரூபண உறுதி கூற்றுரையில் எதிரிக்கு பாத்தியப்பட்ட பண்பொழி கிராமம் மைனர் முதலாளி தெரு நத்தம் சர்வே எண் 704/3 கண்ட கதவு எண். 57A கொண்ட வீட்டை தங்களுக்கு 30 லட்சம் ரூபாய்க்கு கிரையம் பேசி முன்பணமாக 20 லட்சத்தை என் செங்கோட்டை வீட்டில் வைத்து பெற்றுக்கொண்டு அன்றைய தினத்திலேயே கிரைய ஒப்பந்த ஆவணம் ஒன்றை எதிரி பிறப்பித்து கொடுத்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஆவணம் எதிரிக்கு பணம் கொடுத்ததற்கான யாதாஸ்து என சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான்.

ம.சா.ஆ.8–ல் தாங்கள் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு முன்னரோ பின்னரோ எனது வங்கி கணக்கில் கையிருப்பு எவ்வளவு இருந்ததாக தெரிகிறது என்றால் 22.01.2020 தேதியில் அதிகபட்சமாக ரூ.6,08,000/–ம் (6 லட்சத்து எட்டாயிரம் ரூபாய்) இருப்பதாக உள்ளது. 01.03.2020 தேதியில் தங்களது வங்கிக் கணக்கில் இருப்பு எவ்வளவு இருந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் 01.03.2020 தேதியில் கை இருப்பு இருந்ததாக பதிவுகள் எதுவும் இல்லை ஆனால் 03.03.2020 தேதியில் ரூ11,000/– (ரூபாய் 11 ஆயிரம்) உள்ளது. ம.சா.ஆ.10 குறித்து முதன் முதலில் நான் முதல் விசாரணை சாட்சியம் அளித்த போது என்னிடம் எதிரி ஒப்படைத்ததாக நான் கூறவில்லை என்றால் சொல்லவில்லை. ம.சா.ஆ.10 ஆவணம் நான் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கும்போது எனது கையில் இல்லாததால் முதல் விசாரணை சாட்சியத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல எனது கை வாசம் இருந்தது.

என்னிடம் இன்ஷால் பேகம் மகேந்திரன் என்பவர் மூலம் வாங்கிய கடன் நடவடிக்கை உள்ளது என்றால் இல்லை அந்த தொகை நான் இன்ஷால் பேகத்திற்கு நேரடியாக கொடுத்தேன். அந்த கடன் தொகை ரூபாய் 10 லட்சம் ஆகும். அதில் ரூபாய் 5 லட்சத்தை 26.03.2020 அன்று இன்சால் பேகத்தின் உறவினர் ரம்ஜான் பேகம் இன்ஷால் பேகத்திற்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 5 லட்சத்தை மகேந்திரனின் வங்கி கணக்கில் அனுப்பி மகேந்திரனின் வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மகேந்திரன் மூலம் ஏற்பட்ட அந்த கடன் நடவடிக்கையின் போது இந்த வழக்கில் எதிரியும், இன்ஷால் பேகமும் இரண்டு வழக்குகளிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலைகளில் கையொப்பம் மட்டும் இட்டு கொடுத்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல என்னிடம் தான் கொடுத்தார்கள். அந்த கடன் நடவடிக்கை ஏற்பட்ட காலத்தில் நான் வழக்கில் காட்டியுள்ள முகவரியில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. சங்கரன்கோவிலில் அந்த காலகட்டத்தில் நான் எனது மனைவியுடன் குடியிருந்து வந்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரியிடமிருந்து எனக்கு வரவேண்டிய ரூபாய் 5 லட்சத்திற்கு அதிக வட்டி வசூல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும், அசல் தொகை அதிகமாக எதிர்பார்த்தும் இந்த வழக்கில் எதிரியின் மீதும், அவரது மனைவியின் மீதும் இரண்டு தனித்தனி வழக்குகள்

தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.  அந்த இரண்டு வழக்குகளிலும் நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.06 14:07:00 +0530

Judicial Magistrate, Shenkottai